10/=

பக்கங்கள் 0

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

ல் 01 அதிர்வு 162 வியாழக்கிழமை நவம்பர் 02 2017 ethiroli 3

# சாரதி கொலை மூவருக்குத் தூக்கு

## வவுனியாவில் நேற்றுத் தீர்ப்பு



வவுனியா, நவ.02

வாடகைக்கு அமர்த்திச் சென்ற லொறியின் சாரதியை வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் வைத்து கொலை செய்த குற்றத்திற்காக மூன்று பேருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் நேற்று மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

06▶

# வயது கூடியவருடன் திருமணம் மறுத்த மாணவி உயிர்மாய்ப்பு



மட்டக்களப்பு, நவ.02

தன்னைவிட வயது கூடியவரைத் திருமணம் செய்யுமாறு பெற்றோர் வற்புறுத்தியதால், மாணவி ஒருவர் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். கொம்மாதுறை - சுடரொளி வீதியை அண்மித்துள்ள வீட்டில் வசிக்கும், செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர கலைப்பிரிவில் கல்வி பயிலும், இராசன் விதுஷிகா(வயது-17) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த 30 வயதான நபர் ஒருவரைத் திருமணம் செய்யுமாறு பெற்றோர் இவரைக் கேட்டுள்ளனர். ஆனால் அதற்கு விதுஷிகா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஆயினும் அவரது விருப்பத்துக்கு மாறாக திருமண ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை பாடசாலையால் வீடு வந்த விதுஷிகா,

06▶





# அரசியல் கைதிகளை மீட்க எம்.பிக்களுக்கு அழைப்பு

## பல்கலை மாணவர் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ.02

உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை மீட்டெடுக்க என்ன நடவடிக்கையை எடுக்க வேண்டும் இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர். இது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்துள்ள

06▶

## அரியாலை இளைஞரை

# அதிரடிப்படையே சுட்டுக் கொன்றது

## துப்பாக்கி, வாகனங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ, 02

அரியாலையில் இளைஞனைச் சுட்டுக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பவற்றை யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள விசேட அதிரடிப்படையினரின் முகாமில் இருந்து குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்று முன் தினம் மீட்டுள்ளனர்.

கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ். அரியாலை கிழக்கு மணியம் தோட்டம் வசந்தபுரம் முதலாம் குறுக்கு வீதிப் பகுதியில் 24 வயதுடைய டொன்பொஸ்கோ ரிக்மன் என்பவர் இனந்தெரியாதோரின்

06▶

# வவுனியாவில் இன்று மனிதச் சங்கிலிப் போர்

வவுனியா, நவ.-02

உண்ணாவிரதமிருந்து வரும் அரசியல் கைதிகளின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க வேண்டுமென வலியுறுத்தி இன்று பிற்பகல் 2.30 மணி முதல் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக மனிதச் சங்கிலிப் போராட்டமொன்று இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்தில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் வவுனியா மாவட்டச் செயலாளர் சு.டோன் பொஸ்கோ விடுத்துள்ள

06▶



# போராடும் மாணவர்களை சந்தித்தார் அமைச்சர் அனந்தி

யாழ்ப்பாணம், நவ.02

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தொடர்ந்து 3ஆவது நாளாகவும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களைச்

06▶

# கோப்பாய் பாலத்தில் ஆசிரியர் மர்மச்சாவு



கோப்பாய், நவ.02

முதல் நாளிரவு வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற ஆசிரியர் ஒருவர், நேற்றுக்காலை கோப்பாய் - கைதடி வீதி பாலத்தடியில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

சாவகச்சேரி சகலகலாவல்லி ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியராகப் பணியாற்றும், சாவகச்சேரி - சங்கத்தானையைச் சேர்ந்த ,

06▶

# அமெரிக்காவில் தாக்குதல் இலங்கையருக்குப் பாதிப்பில்லை

கொழும்பு, நவ.02

அமெரிக்கா - நியூயோர்க்கில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலில் இலங்கையர்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள லோயர் மன்ஹாட்டன் பகுதியில் நேற்று நடந்த தாக்குதலில் 8 பேர் பலியானதுடன், 15 பேர் படுகாயமடைந்திருந்தனர். இதன் போது இலங்கையைச்

06▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வியாழன் 02 நவம்பர் 2017

# கடன் திட்டங்கள் விரிவடையும்

## அமைச்சர் கயந்த தகவல்



கொழும்பு,நவ.02

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளைக் கட்டியெழுப்புவதற்கான கடன் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவைத் துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

"சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறைக்கான கடன் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது.இந்தக்கடன் திட்டத்துக்கான கேள்விகள் அதிகரித்து வருகின்றன. இதனால் குறித்த வேலைத்திட்டத்தின் கால எல்லை நிறைவடைவதற்கு முன்னர், முழு நிதியினையும் பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிலாளர்களுக்கான சலுகைக் கடன் தொகையினை வழங்க முடியும். இந்தக் கடன் திட்டத்தை மேலும் விரிவுபடுத்திப் பெரும்பாலானோர் பயனடையக் கூடிய வகையில் ஆசிய அபிருத்தி வங்கியிடம் 75 மில்லியன் அமெரிக்க டொலரை மேலதிகமாகப் பெற்றுக் கொள்ள, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# கடல் நஞ்சு உடலில்: யாழ். மீனவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம்,நவ.02

கடலில் உள்ள நச்சுப் பதார்த்தம் உடலில் பட்டதால் மீனவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

சாவல்காட்டைச் சேர்ந்த தெய்வேந்திரம் சாந்தராசா (வயது 44) என்ற மீனவரே இவ்வாறு கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை, யாழ். குடாக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போதே அவரது உடலில் குறித்த நச்சுப் பதார்த்தம் பட்டுள்ளது. இதனால் உடனடியாகக் கரைக்குத் திரும்பிய குறித்த மீனவர் தனக்கு தலை சுற்றுவதாகச் சக மீனவர்களிடம் தெரிவித்துள்ளார். உடனடியாக அவரை ஓட்டோவில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் போது வழியிலேயே அவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

மீனவர்களால் 'சொறி' என்று அழைக்கப்படும் இந்த விஷப் பதார்த்தம், சாதாரண கண்களுக்குப் புலப்படுவதில்லை எனவும், ஆனால் உடம்பில் இது பட்டால் மரணம் நிச்சயம் எனவும் அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (அ)

# நேற்று முதல் தண்டம் 25,000



கொழும்பு,நவ.02

போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தும் சட்டம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப் படுவதாக வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.


இதற்கான வர்த்தமானி அறிவிப்பு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் வெளியிடப்பட்டுள்ளது.

போதையில் வாகனத்தைச் செலுத்துதல், காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்துதல், ரயில் கடவைகளில் கவனயீனமாக வாகனங்களைச் செலுத்துதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு இந்தத் தண்டப் பணம் விதிக்கப்படவுள்ளது.

அதேபோன்று, வயதுகுறைந்த சிறுவர்கள் வாகனங்களைச் செலுத்துவதில் ஊக்குவிக்கப்படும் பட்சத்தில் அதற்காகவும் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்படவுள்ளது. (அ)

# மட்டக்களப்பில் கொலை யாழ்ப்பாணத்தில் நகை





மட்டக்களப்பு,நவ.02

மட்டக்களப்பு, ஏறாவூர் - சவுக்கடி கிராமத்தில் தீபாவளி தினத்தன்று படுகொலை செய்யப்பட்ட இளம் வயது தாய் மற்றும் அவரது மகன் ஆகியோரின் படுகொலைச் சம்பவத்தின் போது கொள்ளையிடப்பட்ட தங்க நகைகள் யாழ்ப்பாணத்தில் மீட்கப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியென சந்தேகிக்கப் படும் நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே கொள்ளையிடப்பட்ட நகைகளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

தீவிரமான புலன் விசாரணைகளின் மூலம் பொலிஸார் தன்னை நெருங்குவதை அறிந்த, பிரதான சந்தேகநபர் நாட்டை விட்டுத் தப்பியோடும் நோக்கத்தோடு தலைமறைவாகியிருந்தார். ஆயினும் அவரும், அவரது சகா ஒருவரும் கடந்த ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரிடம் சிக்கினர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே, தாயையும்,மகனையும் கொலை செய்து விட்டு, சந்தேகநபர்கள் கொள்ளையடித்த நகைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்று அடகு வைத்திருந்த விடயம் தெரியவந்தது. இதனையடுத்து யாழ்ப்பாணம் வந்த விசேட பொலிஸ் குழு, கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடமையான 16 பவுண் தங்க நகைகளை மீட்டது. மீட்கப்பட்டுள்ள தங்க நகைகள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் அதிகாரிகளால் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் கையளிக்கப் பட்டன. (அ)

# அனுமதியற்ற கோழிப்பண்ணை நாற்றம், இலையானால் அவதி



மானிப்பாய்,நவ.02

சண்டிலிப்பாய் பகுதியில் அனுமதி பெறாமல் இயங்கிவரும் கோழிப்பண்ணையில் இருந்து வெளியேறும் துர்நாற்றத்தாலும், இலையான் தொல்லையாலும் அயலில் வசிப்போர் அவதிக்குள்ளாவதாக் கூறப்படுகின்றது.

சண்டிலிப்பாயில் ஜே/143 கிராம சேவையாளர் பிரிவுக்குட்ட பகுதியிலேயே இவ்வாறான அனுமதி பெறாப்படாத கோழிப் பண்ணை உள்ளது. இந்தப் பண்ணையில் இருந்து பெருமளவு இலையான்கள் வெளியேறி அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளில் மொய்ப்பதாகவும், இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த கோழிப்பண்ணை அமைந்துள்ள பகுதியால் செல்பவர்கள் துர்நாற்றம் காரணமாக மூக்கைப் பிடித்தபடியே அந்த இடத்தைக் கடந்து செல்லவேண்டியிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு அந்தப் பகுதிக்குப் பொறுப்பான சுகாதாரப் பரிசோதகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# அடிக்குது குளிர்!



வவுனியா, நவ.02

நாட்டில் நிலவி வரும் சீரற்ற கால நிலை காரணமாக வடமாகாணத்தில் கடுங்குளிர் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக மழை பொழிவதால், வடக்கில் காலையில் அதிக பனிமூட்டத்துடனான காலநிலை நிலவுகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணம் - கண்டி ஏ9 பிரதான வீதியில் நேற்றுக் காலை 4 மணியில் இருந்து 8 மணிவரை கடுமையான மூடுபனி காணப்பட்டதால், அதனூடாக வாகனப்போக்குவரத்தில் ஈடுபட்டவர்கள் கடும் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்க முடிந்தது.

ஏ9 வீதியின் வவுனியா, ஓமந்தை, புளியங்குளம், மாங்குளம் ஆகிய பிரதேசங்களின் வீதிகளையே இவ்வாறு பனி மூடியிருந்தது. எனவே அடுத்துவரும் சிலநாட்கள் இந்த வீதியின் ஊடாகப் பயணிப்போர் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மின்விளக்குகளை ஒளிரவிட்டு வாகனத்தைச் செலுத்துமாறும் சாரதிகளுக்கு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஆ)

# துயிலுமில்லச் சிரமதானம் வன்னிவிளாங்குளத்தில் நாளை

வவுனியா, நவ.02

நவம்பர் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படவுள்ள மாவீரர் நாளை முன்னிட்டு வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் நாளை வெள்ளிக்கிழமை துப்பரவு செய்யப் படவுள்ளது. எனவே இந்தப் புனித பணியில் பங்கு கொள்வதற்காக மாங்குளம், பனிக்கன்குளம்,கிழவன்குளம், கொல்லர் புளியங்குளம், வன்னிவிளாங்குளம், வடகாடு, மல்லாவி போன்ற பிரதேசங்களில் வசிக்கும் மக்களை இந்தச் சிரமதானத்தில் நாளை காலை 10 மணியளவில் கலந்து கொள்ளுமாறு வன்னிவிளாங்குளம் மாவீர் துயிலும் இல்ல மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (அ)

# தேசிய நத்தார் விழா இம்முறை திருமலையில்



கொழும்பு,நவ.02

இந்த வருடம் தேசிய நத்தார் தின நிகழ்வுகளை "அன்பின் உறைவிடம் நத்தார்" என்ற தொனிப்பொருளின் கீழ் திருகோணமலை கத்தோலிக்க பேராயர் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்துவதற்காகச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனால் நத்தார் கொண்டாட்டங்களுக்குரிய ஏற்பாடுகளைக் கவனிக்க திருகோணமலைக் கத்தோலிக்கப் பேராயர் பிரதேசத்தில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வியாழன். 02 நவம்பர் 2017 ethirolijaffna@gmail.com

# போவதா? விடுவதா?

தமிழர் தாயகத்தில் ஏதேனும் போராட்டங்கள் நிகழ்ந்தால், அதில் தலையைக் கூடக் காட்டாமல் பத்திரமாக ஒளிந்திருந்துவிட்டு, பின்னர் அறிக்கைகளால் காகிதப் போர் செய்வதுதான் தமிழ் அரசியல் தலைமைகளின் பழக்கம். இதனால் மக்களுக்கு தலையையும், அதிகாரத் தரப்புக்கு வாலையும் காட்டி விலாங்கு மீன்களாக அவர்கள் தம் இருப்பைத் தக்க வைத்துக் கொண்டிருந்தனர்.

அண்மையில் நடந்து முடிந்த பல போராட்டங்களில், மக்களின் வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றம், மாகாண சபை என்பவற்றுக்குப் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டவர்களில் அநேகர் பங்குகொள்வதேயில்லை. அதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறவே வருவதில்லை. தங்களுக்கு சொகுசு வாகனங்களுக்கான 'பேர்மிற்றை' பெறவும், இதர வசதிகளை அதிகரிக்கவும், கொடுப்பனவுப் படியைக் கூட்டவும் அரசுக்கு அவர்கள் கொடுக்கும் அழுத்தத்தின் நூறில் ஒரு பங்கைக் கூட, மக்கள் பிரச்சினைக்காக அவர்கள் கொடுப்பதில்லை. நாடாளுமன்றம் யாருமே இல்லாமல் காற்றுவாங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் தனியொருவனாக எழுந்து, மக்கள் பிரச்சினைகளை முழங்கிவிட்டு வருவதால் எந்தப் பயனும்கிடைத்ததுமில்லை.கிடைக்கப்போவதுமில்லை. எப்படியாவது மக்களின் பிரச்சினைகளைத் தட்டிக் கழிப்பதிலேயே பெரும்பாலான தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கவனமாக இருக்கிறார்கள்.

அதிலும் வடக்கு மாகாணசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருப்பதால், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும், ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சரும் தங்களிடம் குறை தீர்க்கக் கோரிக்கை விடுப்பவர்களிடம், "நாங்கள் செய்யிறதுக்கு கூட்டமைப்புத் தடை போடுது" என்று சொல்லி நழுவிவிடுகிறார்கள். அதேபோன்றே வடமாகாணசபை உறுப்பினர்களும் " இலங்கை அரசாங்கம் ஒண்டுக்கும் அனுமதி தருகுதில்லை" என்று மழுப்பிவிட்டு நடையைக் கட்டுகிறார்கள்.

அரசியல் கைதிகள் விவகாரத்திலும் இதே பாணியையே நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் கைக்கொண்டனர். விதிவிலக்காக ஒரு சில மாகாணசபை உறுப்பினர்கள் மாத்திரம் களத்தில் இறங்கிப் போராடினர். தமக்கும் இந்தப் போராட்டத்துக்கும் சம்பந்தம் இல்லாதது போல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேடிக்கை வீரர்களாக இருந்தனர். இந்த நிலையில்தான் கைதிகளுக்காகப் போராடிக்கொண்டிருந்த யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட, வடக்குக் கிழக்கைச் சேர்ந்த சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு 'செக்' வைத்துள்ளார்கள்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஒன்று கூடி அடுத்து என்ன செய்யவேண்டும் என்று தீர்மானம் எடுத்து அதைச் செயலிலும் காட்டுவதற்கான கலந்துரையாடலுக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் வரவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அப்படி வராதவர்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்பவர்களாகக் கருதப்படுவர் என்றும் பல்கலை மாணவர்கள் சற்றுக் கடுமையாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இதனால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாத நிலைக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். கலந்துரையாடலுக்கு வராவிட்டால் தமிழ் மக்கள் தள்ளி வைத்துவிடுவார்களோ என்ற பயம். வந்தால் ஏதாவது பொறுப்பைத் தந்து மாட்டி விடுவார்களோ என்ற ஏக்கம். இரண்டுக்கும் நடுவில் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள். குறைந்த பட்சம் வாக்குகளுக்காகவேனும் கைதிகள் பிரச்சினையைக் கையிலெடுத்து அதைத் தீர்க்க முயலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார், யார்? இந்த வரலாற்றுக் கடமையைத் தட்டிகளித்து எட்டப்ப உறுப்பினர்கள் யார், யார்? என்பதை பல்கலைக்கழக மாணவர்கள் வைத்த 'செக் வெள்ளிக்கிழமை காட்டிக் கொடுத்துவிடும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# இந்த நிலை என்று மாறுமோ?

முல்லைத்தீவு, நவ.02

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேசத்திலுள்ள புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன் கன்குளம் ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதியைப் புனரமைப்பதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காது இருப்பதால், மாரி காலத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் பாரிய குழிகள் காணப்படுகின்றன. தற்போது மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் அந்தக் குழிகளில் நீர் தேங்கிக் காணப்படுகிறது. ஓரளவு போக்குவரத்துக்கு ஏதுவாகக் காணப்பட்ட இந்த வீதியூடாக சட்டவிரோதமாக மணல் ,கிரவல் மற்றும் காட்டுமரங்களை ஏற்றிக் கொண்டு கனரக வாகனங்கள் செல்வதால், அந்த வீதி இன்னும் மோசமான நிலையை அடைந்துள்ளது. எனவே சட்டவிரோதக் கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதோடு, வீதியையும் புனரமைக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஆ)

# மைத்திரியின் அதிரடி!

கொழும்பு, நவ.02

வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் புதிய தலைவராகப் பொறுப்பேற்ற ரொஷான் பிரியதர்ஷன இலங்கசிங்ஹவை , அந்தப் பதவியிலிருந்து ஒருமாதத்திலேயே தூக்கியெறிந்து அதிரடி காட்டியுள்ளார் ஜனாதிபதி மைத்திரி.

குறித்த பதவிக்குத் தகுதியான ஒருவரை நியமிக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடமத்திய மாகாண ஆளுநர் பி.பீ திசாநாயக்கவிடம் எழுத்துமூலமாக கோரியுள்ளார்.

அதிகார சபையின் தற்போதைய தலைவர் ரொஷான் பிரியதர்ஷன இலங்கசிங்ஹ, வடமத்திய மாகாண சபையின் முன்னாள்



அமைச்சர் சரத் இலங்கசிங்ஹவின் புதல்வராவார்.

ரொஷான் பிரியதர்ஷன இலங்கசிங்ஹ,இந்தப் பதவிக்கு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி நியமிக்கப்பட்டு, அவர், தன்னுடைய கடமைகளை ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதியன்றே பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்தாகும். (ஆ)

# போதை கடத்திய தம்பதியர் கைது

கொழும்பு, நவ.02

30 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் பாகிஸ்தான் தம்பதியர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 30 மில்லியன் ரூபா பெறுமதியான 2.7 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.கைதுசெய்யப்பட்ட பெண் 30 வயதுடையவரெனவும் ஆண் 54 வயதுடையவரெனவும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் லாகூரில் இருந்த வந்த விமானத்திலேயே இவர்கள் இலங்கை வந்துள்ளனர்.

இதற்கு முன்னர் குறித்த பெண் இலங்கைக்கு 6 தடவையும் ஆண் 2 தடவையும் வந்துள்ளதாகப் பொலிஸாரின் போதைவஸ்துத் தடுப்புப் பிரிவினரின் ஆரம்ப கட்ட விசாணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஆ)

# மருந்தாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, நவ.02

அரசாங்க வைத்தியசாலையில் பணி புரியும் மருந்தாளர்கள் நாடளாவிய ரீதியில் நேற்றுப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஊடாக நடத்தப் படும் மருத்துவ மற்றும் மருந்தாளர்களுக்கான பட்டப்படிப்பை நிறுத்தியமையே இந்தப் பணிப்புறக்கணிப்புக்குக் காரணம் என, அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் திலக்கரத்ன தெரிவித்தார். (ஆ)

# மூதூரில் கைவரிசை: யாழ். திருடனுக்கு சிறை

யாழ்ப்பாணம், நவ.02

திருகோணமலை - மூதூர் பகுதியில் நான்கரை இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றினை திருடி வைத்திருந்த யாழ்.வாசிக்கு ஒரு வருடம் கட்டாயச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மூதூர் நீதிமன்ற நீதிவான் ஐ.என். றிஸ்வான் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு ஒரு வருடம் கட்டாய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மூதூர்ப் பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிளைத் திருடி இயந்திர இலக்கம் , செசி இலக்கம் என்பவற்றை மாற்றி போக்குவரத்துச் செய்து வந்துள்ளார்.இந்த நிலையில் யாழ். போக்குவரத்து பொலிஸாரினால் மோட்டார் சைக்கிளுக்கான ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டபோது, அவர் தற்செயலாகச் சிக்கினார். இதையடுத்து குறித்த நபரைக் கைது செய்த யாழ்ப்பாணம் பொலிஸார் மூதூர் பொலிஸாரிடம் குறித்த நபரை ஒப்படைத்தனர். மூதூர் பொலிஸார் குறித்த நபரை நீதிவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்திய போதே, அவருக்கு ஒரு வருட கட்டாய சிறைத்தண்டனை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. (ஆ)

# கொக்கிளாய் ஆற்றில் கண்டல்தாவர நடுகை



முல்லைத்தீவு, நவ.02

முல்லைத்தீவு - கொக்கிளாய் ஆற்றின் கரையோரப் பகுதிகளைப் பாதுகாக்கும் வகையில் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன. குறித்த மாவட்டத்தின் சிறுகடல் பகுதியான கொக்கிளாய் ஆற்றின் கரையோரப் பகுதியைப் பாதுகாக்கவே இவ்வாறான வேலைத்திட்டங்கள்முன்னெடுக்கப்பட்டுள்ளன.கொக்கிளாய், புளியமுனை மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பெண்கள் அமைப்பின் ஊடக கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

## இன்று நாளும் கோளும்

02.11.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 16 ஆம் நாள்

திரயோதசி பகல் 02.35 வரை
ரேவதி மாலை 05.08 மணி வரை
அமிர்தயோகம்
இராகுகாலம் 01.30 - 03.00
சுபநேரம் 10.45 - 11.45
எமகண்டம் 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குழப்பம் | இரக்கம் | சோர்வு | கவலை | இன்பம் | ஜெயம் | வேதனை | ஆதாயம் | அனுகூலம் | சினம் | நன்மை | சுகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வியாழன் 02 நவம்பர் 2017



# கேகாலையில் அதிசயக் கிணறு

கொழும்பு, நவ.02

கேகாலையில் பல்வேறு நுட்பங்கள் அடங்கிய புராதனக் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குடிநீரில் உப்புத்தன்மையை நீக்கி நீரைப் பாதுகாப்பதற்கு அவசியமான தொழில்நுட்பம் இந்தக் கிணற்றில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கேகாலை- ரம்புக்கன வீதியின் பத்தமுரே நவகமுவ பழைய தேவாலயத்துக்கு அருகிலேயே இந்தக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 5 அடி கொண்ட இந்தக் கிணற்றின் மீது பெரிய அளவிலான கருங்கல் வைத்து குப்பை சேராத வகையில் அது மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரியளவிலான மண் சட்டிகள் சிலவற்றைக் கிணற்றுக்குள் இறக்கி அதில் நீரின் தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நவகமுவவில் உள்ள ஆதிகாலத்துத் தேவாலயத்துக்கு வரும் பக்தர்கள் பயன்படுத்துவதற்காக இந்தக் கிணற்றைப் பயன்படுத்தியிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. (ஆ)

# நாயாற்றுப் பாலத்தின் தகடுகள் சேதம்



முல்லைத்தீவு, நவ.02

முல்லைத்தீவு நாயாற்றுப் பாலத்தின் தகடுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.


முல்லைத்தீவு -திருகோணமலை வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் நாயாற்றுக்கு மேலாகப் போடப்பட்டிருக்கும் இரும்புப் பாலத்தின் சில பகுதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன.

பாலத்தின் கீழ்ப் பகுதித் தகடுகள் உப்பு நீரால் அரிக்கப்பட்டு, சேதமடைந்த நிலையில் உள்ளதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த பாலத்தினைப் புனரமைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஆ)

# 'அந்த 18 நாட்கள்' நாவல் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.02

கலையார்வன் கு.இராயப்புவால் எழுதப்பட்டு திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாக வெளிவரும் "அந்த 18 நாட்கள்" என்னும் நாவலின் வெளியீட்டு விழா குருநகர் கலாசார மண்டபத்தில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.




புலவர் பி.ஆனந்தராயர் (வேல்மாறன்) தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஏற்பாட்டாளர் உரையை ப.பீற்றரும் (நவின் சந்திரா), வெளியீட்டுரையை திருமறைக் கலாமன்ற ஊடக இணைப்பாளர் திரு.கி.செல்மர் எமிலும், மதிப்பீட்டுரைகளை குருநகர் தூய யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருள்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன், ஆசிரியரும் விமர்சகருமான சி.றமேஸ் ஆகியோரும் நிகழ்த்துவர். ஏற்புரையை நூலாசிரியர் வழங்குவார்.

இந்த நாவல் 1963 ஆனி 14 அன்று முல்லைத்தீவில் இருந்து தொழிலுக்குச் சென்றது முதல் 1963 கார்த்திகை 17 வீடு வந்து சேரும் வரையிலான 155 நாட்களில் 18 நாட்கள் ஆழ்கடலிலும் ஏனைய நாட்கள் அந்நிய நாட்டிலும் குருநகர் மீனவர்கள் சிலர் சந்தித்த மறக்க முடியாத உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# 'டிமிக்கி' விட்ட திருடனை காட்டிக் கொடுத்த கமெரா

கொழும்பு, நவ.02

நான்கு மாத காலமாக தேடப்பட்டு வந்த சந்தேக நபரொருவரைக் கண்காணிப்பு கமராவின் உதவியுடன் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் ஏறாவூர் ஜாமிஉல் அக்பர் பள்ளிவாசலில் தொழுகைக்குச் சென்ற ஒருவர், தனது மோட்டார் சைக்கிளை வெளியே விட்டிருந்தார். எனினும் அவர் தொழுகை முடிந்து வந்து பார்த்தபோது, மோட்டார் சைக்கிளைக் காணவில்லை.

இந்த நிலையில், தனது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக அவர் பொலிஸில் முறைப்பாடு செய்தார். இந்த முறைப்பாட்டுக்கமைவாக வீதிகளிலுள்ள கண்காணிப்புக் கமெராக்களின் உதவியுடனும், புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலும் தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இந்த விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபரை ஓட்டமாவடியில் வைத்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஆ)

# விரைவில் விடுவியுங்கள் எங்கள் பூர்வீகக் காணிகளை!

## கேப்பாபிலவு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ.02

எங்களை எதிரிகளாகவோ, இனவாதிகளாகவோ பார்க்காமல் எமது நிலத்தை விரைவாக விடுவித்து அங்கு சென்று வாழ நல்லாட்சி அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளையும் படையினர் விடுவிக்க வேண்டுமெனக் கோரி ஒன்பது மாதங்களாக தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கேப்பாபிலவு மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆயினும் இன்னும் அவர்களின் நிலங்கள் விடுவிக்கப்படவில்லை.

"பல தலைமுறைகள் பூர்வீகமாக வாழ்ந்த தமது நிலத்திலிருந்து போரால் வெளியேற்றப்பட்ட எங்களை, மீள்குடியேற்றம் என்ற போர்வையில் அழைத்து வந்து கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் தங்க வைத்தனர். ஆனால், இந்த மாதிரிக்கிராமத்தில் வாழுகின்ற நாங்கள் வாழ்வாதாரம் இன்றி பல இடர்ப்பண்பாடுகளை இழந்து கலாசாரச் சீரழிவுகளுக்கு முகங்கொடுத்து வாழ்கின்றோம். எனவேதான் எமது சொந்த நிலத்தை விடுவிக்குமாறு ஒன்பது மாதங்களாக இந்த இடத்தில் போராடி வருகின்றோம். 'இதோ விடுகிறோம், அதோ விடுகிறோம்' என வாக்குறுதிகளை வழங்கி அரசு தொடர்ந்தும் எங்களை ஏமாற்றி வருகின்றது. இலங்கைத்தீவின் ஏனைய மக்களைப்போன்று நாங்கள் வாழ எமது நிலத்தை எங்களிடம் தாருங்கள், எங்களை எதிரிகளாகவோ இனவாதிகளாகவோ பார்க்கவேண்டாம். நாங்கள் யாருக்கும் எதிரானவர்கள் அல்ல" எனக் கேப்பாபிலவு மக்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)



# 'கான்சர்' வருமெண்டாம் போயிலை 'கான்சல்'

நேற்றைக்கு சின்னத்துரையோடை போயிருந்து கதைக் கேக்கை சொன்னான் "மச்சான் இன்னும் இரண்டு வருசத்துக்குத்தான் உந்தப் போயிலை விளையாட்டு. பிறகு எல்லாத்தையும் சுருட்டிக் கட்ட வேண்டியதுதான்" எண்டான்.

"என்னடா ஒரு மன ஆறுதலுக்குக் கதைக்க எப்ப வந்தாலும் ஒரு குண்டைத் தூக்கிப் போடுறதுதான் உன்ரை பழக்கமாப் போச்சுது. எட விழுவானே! உதை ஒருக்கா விளக்கமாச் சொல்லு பாப்பம்" எண்டன்.

"மச்சான் எங்கடை வேரைப் பிடுங்க எண்டு பல விளையாட்டு இப்ப உலகத்திலை நடக்கிது. உது தெரியாமல் சும்மா கோவில் குளம், கலியாண வீடு, செத்த வீடு எண்டு சுத்திக் கொண்டு, ஊருலகம் தெரியாமல் சீவிக்கிற உன்னைப் பாக்கப் பாவமாக் கிடக்கு.

2020 தொடக்கம் நாங்கள் போயிலை கண்டு நடேலாது. போயிலை வேலை செய்யேலாது. விக்கேலாது எண்டு அரசாங்கம் சட்டம் கொண்டு வந்திருக்கு. தெரியுமோ?" எண்டான் சின்னத்துரை. போயிலையாலை கான்சர் வருகுதாம் எண்டு ஒரு சாட்டும் சொல்லுகினமாம்.

அதுக்கு மேலை நான் ஒண்டும் கதைக்கேல்லை. எனக்குத் தெரிஞ்சவரை எங்கடை அப்பு, ஆச்சி, பாட்டன், கொப்பாட்டன், கோந்துறு, மாந்துறு காலத்திலை இருந்து போயிலைதான் எங்கடை வாழ்க்கை. விசரங்களுக்கு உது தெரியாமல் ஏன் எங்களோடை விளையாடுறாங்கள்?. அத்தினையோ வருஷம் வராத கான்சர் இப்ப என்னெண்டு வருகுது?

நான் அடிச்சுச் சொல்லுவன். அண்டைக்கும் பேப்பரிலை பாத்தனான். கான்சர் வாறதுக்குக் காரணம் போயிலை இல்லை. இப்ப முந்திமாதிரி எருப்போட்டு ஆர் தோட்டம் செய்யினம்? முந்தி ஆக்களுக்குத் தெரியாமல் இரவிலை போய் களவாத்தான் சிலபேர் உரம் போடுறவை. ஏனெண்டால் உரம் போட்டால் சாமான்களை ஆரும் வாங்க மாட்டினம் எண்டு தெரியும்.

ஆனால் இப்ப புதுசா செய்கைமுறை எண்டு சொல்லி விளைச்சலைப் பெருக்கக் குறுக்கு வழி எண்டு உரம் போடுறதை ஆர் சொல்லிக் குடுத்தது. எல்லாம் அரசாங்கம் தானே செய்தது. அதாலை பப்ளிக்கா சனம் உரம் போடத் துவங்கிவிட்டுது. கான்சர் உரத்தாலைதான் வருகிதேயொழிய போயிலையாலை இல்லை எண்டு எனக்கு வடிவாத் தெரியும்.

உதை நான் கோவிலடியிலை சொல்ல தோட்டத்துச் சின்னத்தம்பி கேக்கிறான் "அப்ப போயிலையை நிப்பாட்டினா, சிகரட்டையும் எல்லே நிப்பாட்ட வேணும். அதைக் குடிக்கிறவனுக்குக் கான்சர் வராதோ?" எண்டு.

எல்லாம் அரசியாலாப் போச்சுது. போயிலை நிப்பாட்டின பிறகும் கான்சர் வந்தால் சொல்லுவினம் சோத்தைத் தின்னாதையுங்கோ எண்டு. பிறகு காய்கறியைத் தின்னாதையுங்கோ எண்டு. பிறகு தண்ணியைக் குடியாதையுங்கோ எண்டு. உப்பிடியே போனாச் சின்னக்கடைப் பக்கமுள்ள பெட்டிக் கடையளுக்குத்தான் பெரிய யாவாரமாயிருக்கும்!

போயிலை செய்யிறதை நிப்பாட்டாதையுங்கோ. புகைக்கிறவனுக்குப் புத்தி சொல்லுங்கோ. பாவிக்கிறவன் இல்லாட்டிச் செய்யிறவனும் இருக்கான். நான் சொல்லுறது இடக்கு முடக்காத்தான் தெரியும். எங்கையேன் தனிய இருந்து யோசிச்சுப் பாத்தால்.....விளங்கும்?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவுப் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ.02

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திப் போராடிய யாழ்.பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களின் மாணவர்களை பல்கலைக்கழகத்திலிருந்தும், விடுதிகளிலிருந்தும் வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் உத்தரவிட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கைதடியிலுள்ள சித்த மருத்துவ பீட மாணவர்கள் நேற்றுப் புதன்கிழமை வகுப்புப் புறக்கணிப்பிலும், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வாரம் முதல் வகுப்புப் புறக்கணிப்பிலும் நிர்வாக முடக்கலிலும் ஈடுபட்டிருந்தனர்.

அதனையடுத்து, நிர்வாக முடக்கலில் ஈடுபட்ட மூன்று பீடங்களைச் சேர்ந்த மாணவர்களை பல்கலைக்கழகத்திலிருந்தும், விடுதிகளிலிருந்தும் வெளியேறுமாறு துணைவேந்தர் நேற்று முன்தினம் அறிவித்தல் விடுத்திருந்தார்.




இந்த நிலையிலேயே, அந்த உத்தரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பல்கலை மாணவர்களுக்கும் அரசியல் கைதிகளுக்கும் ஆதரவு தெரிவித்தும் சித்த மருத்துவ பீட மாணவர்கள், வகுப்புக்களைப் புறக்கணித்ததோடு கொட்டும் மழைக்கு நடுவே ஏ-9 வீதியில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். (அ-4)

## அந்த நாள் ஞாபகம்.....!



**2007.11.02**

இலங்கை வான்படையின் வான்குண்டுத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

## கடற்படைப் பேச்சாளருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, நவ.02

11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பீ தஸநாயக்கவின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரையில் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 2008 மற்றும் 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் 11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் போகச் செய்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தெஹிவளை, பத்தரமுல்ல மற்றும் வத்தளை ஆகிய பகுதிளைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கடத்தி காணாமல் போகச் செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த ஜூலை மாதம் 12ஆம் திகதி தஸநாயக்கவை புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருந்தனர். தஸநாயக்கவுடன் மேலும் ஐந்து பேர் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் விளக்க மறியல் காலமும் 15ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## மாணவர் போராட்டம் தீவிரமடைய
# அரசின் அசமந்தமே காரணம்

யாழ்ப்பாணம், நவ.02

"பேச்சுவார்த்தை மூலம் கைதிகள் பிரச்சினையைத் தீர்க்க நினைத்த மாணவர்களின் போராட்டம், தீவிர மடைந்தமைக்கு அரச தரப்பின் அசமந்தமும், கைவிரிப்புமே காரணிகளாகும். எனவே பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்" என்று வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், "தம் சார்ந்த சமுதாய நோக்கில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவளிப்பது பல்கலைக்கழக நிர்வாகம் உள்ளிட்ட அனைவரதும் தார்மீகக் கடமையாகும். மாணவர்கள் மேற்கொண்டு வரும் இந்தப்போராட்டமானது பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிரான போராட்டம் அல்ல என்பதையும் தாம் சார்ந்த சமூகத்தின் மீதான அக்கறையில் நடத்தப்பட்டு வருகிறதென்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வகுப்புக்களை புறக்கணித்து அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வந்த மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு பூட்டுப் போட்டு முடக்கும் நிலைக்கு தள்ளியது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கைவிரிப்பே ஆகும்.

அமைதியான வழியில் போராடிய மாணவர்களை பிரச்சினைக்கு பேசித் தீர்வு காணலாம் என்று கூறி அழைத்துப் பேசிய ஜனாதிபதி, மாணவர்களிடத்தே வழங்கியிருந்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டமையே மாணவர்கள் போராட்டத்தை தீவிரப்படுத்த வழிசமைத்துள்ளது. சந்திப்பு முடித்து நீங்கள் யாழ்ப்பாணம் செல்வதற்குள்ளே தமிழ் அரசியல்



கைதிகள் விடயத்தில் நல்லதொரு தீர்வை முன் வைப்பதாக பேச்சு மேசையில் வைத்து ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்த வாக்குறுதியானது நிறைவேற்றப்படாது ஒருசில நாள் கழித்து கடந்த புதன் வரை அவகாசம் கோரப்பட்டிருந்தது. புதனும் வந்தது. வாக்குறுதி வெள்ளிக்கிழமைக்கு தள்ளிப்போனது. சில மணித்தியாலங்களில் என்று ஆரம்பித்து பின்னர் புதன் என்றும் வெள்ளி என்றும் கால அவகாசம் கோரப்பட்டிருந்தது.

இதுவரை வகுப்புப் புறக்கணிப்புடன் வரையறுத்து நம்பிக்கையுடன் பொறுமை காத்தே மாணவர்கள் இருந்தார்கள். இந்த நிலையில்தான் அரசியல் கைதிகள் விடயத்தில் தம்மால் எதுவும் செய்ய முடியாதென்று அரசு தரப்பின் சார்பில் அமைச்சர் சுவாமிநாதன் மாணவர் தரப்பிடம் வெள்ளிக்கிழமையன்று தெரிவித்துள்ளார்.

அதன் பின்னரே வேறு வழியின்றி போராட்டத்தைத் தீவிரப்படுத்தும் முடிவுக்கு மாணவர்கள் தள்ளப்பட்டார்கள். தமிழ் அரசியல் கைதிகள் விடயம் அரசியல் காரணங்களுக்காகவே தீர்வு காணப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான அச்சுறுத்தல் நிலையில் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நீதிக்கு புறம்பான முறையில் வழக்கு விசாரணைகள் ஏதுமின்றி பல ஆண்டுகளாக இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதானது இலங்கை அரசாங்கத்தின் தமிழர்கள் மீதான அடக்குமுறையின் வெளிப்பாடாகும்.

தமிழர்களை எந்த வகையிலேனும் அடக்கியாண்டு வருவதன் மூலம் சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகளை குதூகலப்படுத்தி தமது ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதென்ற கடந்த கால ஆட்சியாளர்கள் பயணித்து வந்த இனவாத வழியிலேயே நல்லாட்சி அரசு என்று கூறிக்கொள்ளும் தற்போதைய அரசும் பயணித்து வருவதன் அண்மித்த சாட்சியாகவே தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசின் நிலைப்பாடு அமைந்துள்ளது. மயிலே மயிலே இறகு போடு என கேட்டு, தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமெனக் காத்திருப்பதில் எதுவித பயனும் இல்லை என்பது வரலாறு மெய்ப்பித்து நிற்கும் பேருண்மையாகும்.

அதன நன்குணர்ந்தே யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டினையும் கருத்திலெடுக்காது தீர்வு நோக்கிய தான அழுத்தத்தினை ஏற்படுத்தும் நோக்கில் வேறு வழியின்றி சாத்வீகப் போராட்டத்தை தீவிரப் படுத்தியுள்ளார்கள். தேரை இழுத்து தெருவில் விட்ட கதையாக அரசியல் கைதிகள் விடயமும் ஆகிவிடக் கூடாதென்றால் ஒன்றுபட்ட மாபெரும் சக்தியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதியுடன் நின்றால் மட்டுமே தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நல்லதொரு தீர்வினைக் காண முடியும். ஆகவே, பல்கலைக்கழக நிர்வாகம், மாணவர்களது பெற்றோர், பொது அமைப்புகள், இயக்கங்கள் மற்றும் அரசியல் தரப்பினர் உள்ளிட்ட அனைவரும் பாரபட்சமின்றி ஒன்றுபட்ட ஆதரவினை, தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவான பல்கலைக்கழக மாணவர்களின் சாத்வீகப் போராட்டத்திற்கு வழங்கவேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ஆ)

## கல்வியியல் கல்லூரிக்கு மாணவர்கள் இணைப்பு

கொழும்பு, நவ.02

2017 ஆம் ஆண்டுக்கான, கல்வியியல்கல்லூரிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், இன்று வியாழக்கிழமை வெளியிடப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி , 27 பாடங்களுக்காக 2015ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைவாக 4745 பேர் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என அந்த அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆ)

## ரயில் பொதிகளின் கட்டணம் உயர்வு

கொழும்பு, நவ.02

ரயிலில் பொதிகளைக் கொண்டு செல்வதற்கான கட்டணம் நேற்று முதல் 50 வீதத்தினால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக ரயில் திணைக்கள வர்த்தக மற்றும்விநியோக முகாமையாளர் என்.ஜே. இதிபொலகே தெரிவித்துள்ளார்.

எனினும் வர்த்தக ரீதியான பொதிகளுக்கு மாத்திரமே கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சாதாரண பொதிகளுக்கு வழமையான கட்டணமே அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 2008ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

## முதலாம் சந்திப்பில்...



கொழும்பு, நவ.02

புதிதாக நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தனவை சந்தித்தார்.

22 ஆவது கடற்படையின் புதிய தளபதி தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் உத்தியோகபூர்வமாகப் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுப் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின் போது சிநேக பூர்வக் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றதுடன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் புதிய கடற்படைத் தளபதிக்குத் தமது வாழ்த்துக்களையும் இதன்போது தெரிவித்தார். இதன்போது நினைவுச்சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் 2018 ஜனவரியிலேயே!



கொழும்பு, நவ.02

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எனினும் ஏதாவது உள்ளூராட்சி மன்றங்களில் தொடர்ந்தும் பிரச்சினைகள் காணப்படுமாயின் அவற்றைத் தவிர்த்து தேர்தல் நடத்தப்படும் என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்றுக் கைச்சாத்திட்டார். இதைத் தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதும், தேர்தல் ஆணையாளர் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பார் என அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்திருந்தார். (அ)

# காசைச் சேதமாக்கினால் காத்திருக்கிறது சிறை

கொழும்பு, நவ.02

இலங்கையில் புழக்கத்திலிருக்கும் நாணயத்தாள்களைச் சேதப்படுத்துபவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

நாணயத் தாள்களைச் சேதப்படுத்துதல், அதில் மாற்றங்களை செய்தல், மற்றும் சிதைத்தல் என்பன தண்டனைக்குரிய குற்றம் . எனவே குறித்த செயற்பாட்டை நிறுத்திக்கொள்ளுமாறும், அவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ள நாணயத்தாளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக மாற்றிக் கொள்ளுமாறும் , 2017.12.31ஆம் திகதிக்குப் பின்னர் சேதமாக்கப் பட்ட நாணயத்தாள்கள் மாற்றம் செய்யப்படமாட்டாது என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.(அ)




# மீண்டும் சூடு; ஐவர் காயம்

கொழும்பு, நவ.02

எல்பிடிய - பட்டப்பொல பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவர் சிறுவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த அனைவரும் சிகிச்சைக்காக பலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வாகனத்தின் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே இவர்கள் காயமடைந்தனர்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை கொஸ்கொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஆ)

## தொடர்ச்சிகள்

### அரியாலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தார். மேற்படி துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, சம்பவ வலயத்தில் இருந்து சி.சி.ரி.வி காணொளிகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணைகளில் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினை புரிந்தவர்கள் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினரே எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன அதன் பின்னர் விசேட அதிரடிப்படையினர் புலனாய்வு அதிகாரிகளிடம் கடந்த திங்கட்கிழமை வாக்குமூலம் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் துப்பாக்கிதாரர்கள் பயன்படுத்திய துப்பாக்கி மற்றும் வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதேவேளை, மிகவிரைவில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### அமெரிக்காவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டதா என்பதை அறிய , அமெரிக்காவில் உள்ளவர்களின் உறவினர்கள் வெளிவிவகார அமைச்சிடம் தொடர்பு கொண்டனர். இதனையடுத்து அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகத்தோடு தொடர்புகளை ஏற்படுத்திய வெளிவிவகார அமைச்சு, குறித்த தாக்குதல் தொடர்பான தகவல்களைப் பெற்றது . அதன் பின்னரே தீவிரவாத தாக்குதலில் இலங்கையர்களுக்கு பாதிப்பு இல்லை என அறிவிக்கப்பட்டது. (ஆ)

(தாக்குதல் பற்றிய விரிவான செய்தி 7 ஆம் பக்கத்தில்)

### சாரதி கொலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் புத்தளம் பகுதியில் இருந்து மன்னார் நோக்கி லொறி ஒன்றை மூவர் வாடகைக்கு அமர்த்திச் சென்றுள்ளனர். குறித்த லொறி வவுனியா, செட்டிக்குளம், கப்பாச்சி பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது சாரதியைத் தாக்கி கொலை செய்துவிட்டு, அதில் பயணித்த மூவரும் தப்பி ஓடியிருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட செட்டிக்குளம் பொலிஸார் குறித்த லொறியை வாடகைக்கு அமர்த்திச் சென்ற செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த வீரய்யா ரவீந்திர ஜோதி, நேசராசா (ராஜி), குமார் ஆகிய மூவருமே சந்தேக நபர்கள் எனக் கண்டறிந்தனர். பின்னர் சந்தேக நபர்களில் ஒருவரான வீரய்யா ரவீந்திர ஜோதி என்பர் கைது செய்யப்பட்டார். ஏனைய இருவரும் தலைமறைவாகி இருந்தனர்.

குறித்த வழக்கு வவுனியா நீதவான் நீதிமன்றில் பூர்வாங்க வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் மூன்று சந்தேகநபர்களுக்கும் எதிராக 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் திகதி சட்டமா அதிபரினால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப் பகர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.இதன்போது இந்த வழக்கின் 2ஆம், 3ஆம் எதிரிகள் தலைமறைவாகி இருந்தமையால் அவர்கள் இன்றியே விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தன.

வழக்கு மீதான விளக்கங்கள், சாட்சிப் பதிவுகள் நிறைவடைந்த நிலையில் நேற்றைய தினம் வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. குறித்த மூன்று சந்தேகநபர்களும் கொலையை விளைவித்தமை தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அவர்கள் மூவருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.இதேவேளை தலைமறைவாகியுள்ள குற்றவாளிகள் இருவருக்கும் எதிராக திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கினை நெறிப்படுத்தியிருந்தார். (அ)

### கோப்பாய்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனகரட்னம் கோணேஸ்வரன்(வயது-49) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்.

3 பிள்ளைகளின் தந்தையான இவர், நேற்றிரவு 9 மணியளவில் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே சென்றதாகவும் ஆனால் மீண்டும் வீடு திரும்பவில்லை எனவும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் விபத்தா ?திட்டமிட்ட கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஆ)

### வவுனியாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில்,

தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளை அடைவதற்குப் போராடியவர்களைப் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என மீண்டும் மீண்டும் அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அக்கோரிக்கையை முன்வைத்துப் போராடிய விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யப்பட்ட போதிலும் புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானோர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை அநீதியானதாகும்.

ஏற்கனவே, பல தடவைகள் ஆயுதம் தாங்கிப் போராடியவர்களை அரசு விடுதலை செய்து தேசிய நீரோட்டத்தில் இணைத்துள்ளது. கடந்த கால மஹிந்த அரசாங்கம் போல நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாக கூறி பதவிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கமும் இந்த அரசியற் கைதிகளை விடுதலை செய்வதை தொடர்ந்து மறுத்து வருகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளாக வவுனியா மேல் நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த சந்தேகநபர்களுக்கெதிரான விசாரணைகள் அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டமை நீதித்துறை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகும். கடந்த எட்டு வருடங்களாக வட பகுதியிலும் இயல்பு வாழ்க்கை, பாதுகாப்பு பலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அரசாங்கம் கூறிவருகிறது. எந்தவிதமான அச்சுறுத்தல்களோ, ஆயுதப் போராட்டங்களோ இல்லாத போதிலும் சட்டமா அதிபர் சாட்சிகளின் பாதுகாப்புக் கருதி அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறுவதன் மூலம் வட பகுதி பாதுகாப்பான பிரதேசமாக இல்லை,சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை, பாதுகாப்பு பிரிவினர் பாதுகாப்பை சரியாக மேற்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள் எனக் கூறுகின்றாரா? ஜனாதிபதியும், பிரதமரும் அண்மையில் வவுனியாவுக்கு வருகை தந்த போது பாதுகாப்பு பிரச்சினை ஏற்படவில்லையா? எனபதை மக்களுக்கு சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சு என்போர் விளக்கமளித்தால் நன்றாகவிருக்கும். நாட்டின் பாதுகாப்புப் பற்றி சட்டமா அதிபர் ஏன் சந்தேகம் கொள்கிறார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் அல்லது அவர் நீதிபதிகள் சரியான தீர்மானம் எடுக்க முடியாதவர்கள் என சந்தேகம் கொண்டுள்ளாரா? எனத் தெரியப்படுத்த வேண்டும். சட்டமா அதிபரின் செயற்பாடு நீதித்துறையின் செயற்பாடுகளிலும் சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன், இன நல்லிணக்கத்துக்கும் கேடு விளைவிப்பதாக அமையும். ஆகவே, மீண்டும் வவுனியா நீதிமன்றத்தில் விசாரணையை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

### அரசியல் கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில்,

“யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாகிய நாம் உண்ணாவிரதம் இருக்கும் மூன்று அரசியல் கைதிகளின் உடனடிக் கோரிக்கைகள் மற்றும் ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் உரித்தும் உரிமையும் உள்ள மாணவர்கள் என்ற வகையில் பல போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறோம். தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றம் வரை எடுத்துச் செல்லும் உரிமையினைப் பெற்றவர்கள் தாங்கள் என்ற முறையில் அரசியல் கைதிகள் தொடர்பாக உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்துடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவேண்டி உங்களை அழைக்கிறோம்.

இக்கலந்துரையாடலில் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

இந்த அழைப்பினை உதாசீனம் செய்பவர்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்பவர்களாகவே கருதப்படுவார்கள்” என்றுள்ளது. (அ)

### வயத கூடியவருடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் மாலையில் பிரத்தியேக வகுப்புக்கும் சென்று வந்துள்ளார். திருமண ஏற்பாடுகளைச் செய்ய பெற்றோர் வீட்டில் இருந்து வெளியே சென்ற போதே விதுஷிகா தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

### போராடும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து, தன் ஆதரவைத் தெரிவித்தார். “ ஒட்டுமொத்த வடமாகாணசபை உறுப்பினர்களும் அரசியல் கைதிகள் விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றாமல் ஆக்கபூர்வமாகச் செயற்பட முன்வரவேண்டும்” என மாணவர்கள் அவரிடம் தெரிவித்தனர். (ஆ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அதிர்ந்தது மன்ஹாட்டன்!



## காரால் மோதி துப்பாக்கியால் சூடு 8 பேர் பலி: பலர் காயம்


மன்ஹாட்டன், நவ. 02

அமெரிக்காவில் உள்ள மன்ஹாட்டன் பகுதியில் நேற்று மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் லோயர் மன்ஹாட்டன் பகுதியில் மேற்கு வீதியில் உள்ள பாடசாலை அருகில் பொதுமக்கள் கூட்டமாக நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது மர்ம நபர் ஒருவர் கார் ஒன்றை வேகமாக ஓட்டி வந்து, அங்கு சென்றுகொண்டிருந்த மக்கள் மீது மோதினார். மேலும், துப்பாக்கியால் அப்பகுதியில் நடமாடியவர்கள் மீது சரமாரியாகச் சுடத் தொடங்கினார்.

இந்தத் திடீர் துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் பலியாகியுள்ளனர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களுள் சிலர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.

இது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலாக இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)










அலைந்து திரியும் துப்பாக்கிதாரி



சாய்புலோ சாய்போ



துப்பாக்கிதாரிதாரியை மடக்கிப் பிடிக்கும் பொலிஸார்

## சுட்டுப் பிடித்த பொலிஸ்!

மன்ஹாட்டன், நவ. 02

தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவலறிந்து பொலிஸார் அங்கு விரைந்தபோது, துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தவண்ணம் இருந்தார். பின்னர், அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலிஸார், அவர் காயமடைந்த நிலையில் மடக்கிப் பிடித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 29 வயதான சாய்புலோ சாய்போ என அடையாளம் காணப்பட்டுள்ளார். சாரதியாகப் பணியாற்றி வந்த இவர், 2010ஆம் ஆண்டு உஸ்பெய்தானியாவிலிருந்து அகதியாக அமெரிக்காவுக்கு வந்தவர் என்றும், பின்னர் ப்ளோரிடாவில் வசித்து வந்தார் எனவும் அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## தேசிய கீதத்தை அவமதித்தால் 3 ஆண்டு சிறை

சீனா, நவ. 02

சீனாவில் தேசிய கீதத்தை அவமதிப்பவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்க அந்நாட்டு நாடாளுமன்றம் பரிசீலித்து வருகிறது.

கவிஞர் தியான் ஹன் இயற்றி, இசையமைப்பாளர் 'நீ எர்' இசையமைத்த பாடலே சீனாவின் தேசிய கீதமாக ஏற்கப்பட்டுள்ளது.

தேசிய கீதத்தை அவமதிப்பவர்களுக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை வழங்க வகை செய்யும் சட்டம் சீன நாடாளுமன்றத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் தொடங்கிய நாடாளுமன்றக் கூட்டத்தில், இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்வற்கான மசோதா உறுப்பினர்களின் பரிசீலனைக்கு நிலைக் குழுவால் வைக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா நிறைவேறினால், தேசிய கீதத்தை அவமதிப்பவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கடலில் மூழ்கிய கப்பல் 11 பேர் கதி என்ன?

இஸ்தான்புல் அருகே உள்ள ஆசியப் பகுதியில் துருக்கி நாட்டு சரக்குக் கப்பல் ஒன்று கருங்கடலில் மூழ்கியதால், அதில் இருந்த 11 பேரின் கதி என்ன என்பது தொடர்பான எந்த தகவல்களும் கிடைக்காமையால் அந்நாட்டு அரசு அதிர்ச்சியில் உள்ளது.

துருக்கி நாட்டுக்குச் சொந்தமான பிலால் பால் என்ற சரக்குக் கப்பல் அந்நாட்டின் வடமேற்கில் உள்ள புர்சா மாகாணத்தில் இருந்து வடக்கே உள்ள ஜோங்குல்டாக் மாகாணத்துக்குக் கருங்கடல் வழியாகத் தாது இரும்பு ஏற்றிச் சென்று கொண்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இரவு அந்தக் கப்பல் நடுக்கடலில் மூழ்கியதாக துருக்கிப் பிரதமர் பினாலி இல்ட்ரிம் நேற்று தெரிவித்தார். அந்தக் கப்பலில் 11 மாலுமிகள் மற்றும் பணியாளர்கள் இருந்துள்ளனர்.

அவர்களைத் தேடும் பணியில் மூன்று படகுகளும் ஒரு ஹெலிகொப்டரும் ஈடுபட்டுவருகின்றபோதும் எவரும் மீட்கப்படவில்லை. (ஐ)

## ஜப்பான் பிரதமராக மீண்டும் ஷின்சோ அபே

டோக்கியோ, நவ. 02

ஜப்பானில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற சுதந்திர ஜனநாயகக் கட்சித் தலைமையிலான கூட்டணியின் ஷின்சோ அபே மீண்டும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஜப்பானின் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. மொத்தமுள்ள 465 இடங்களில் சுமார் 1,200 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.



மொத்தமுள்ள 465 இடங்களில் ஷின்சோ அபேயின் சுதந்திர ஜனநாயகக் கட்சி தலைமையிலான கூட்டணி, 312 இடங்களைக் கைப்பற்றியது. இதன் மூலம் மூன்றில் இரண்டு பங்கு கிடைத்துள்ளது.

இதையடுத்து, சுதந்திர ஜனநாயகக் கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைக்கவுள்ளது.

அதேவேளை, சுதந்திர ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஷின்சோ அபே (63) மீண்டும் பிரதமராக நேற்றுத் தேர்ந்தெக்கப்பட்டுள்ளார். இவர் 2012ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பிரதமராகப் பதவிவகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் நஸ்ரியா!



சென்னை,நவ.02

'நேரம்', 'ராஜா ராணி', 'திருமணம் எனும் நிஹ்கா' ஆகிய படங்களில் நடித்த நஸ்ரியா, திருமணத்தின் பின்னர் நடிக்காமல் இருந்தவர், மீண்டும் நடிக்கத் தயாராகியுள்ளார்.

மலையாள நடிகையான நஸ்ரியா பெரிய அளவுக்கு வலம் வருவார் என எதிர்பார்க்கப்பட்ட நேரத்தில், நடிகர் பஹத் பாசிலை திருமணம் செய்து கொண்டு நடிப்புக்கு முழுக்குப் போட்டார்.

இந்த நிலையில் அவர் மீண்டும் நடிக்க இருப்பதாக ஒரு தகவலைத் தனது பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளார்.

அதில், "பெங்களூர் டேஸ்'படத்தில் நடித்தது முதலே 'உங்க அடுத்த படம் எது?' என எல்லோரும் கேட்பார்கள். அதற்கான பதில் இதோ. மீண்டும் நடிக்க வருகிறேன். பிரிதிவிராஜ், பார்வதி நடிக்கும் படத்தில் நானும் நடிக்கிறேன். அந்தப் படத்தை அஞ்சலி மேனன் இயக்குகிறார்" எனப் பதிவிட்டிருக்கிறார்.

மேலும் நஸ்ரியாவின் கணவர் பஹத் பாசில் தமிழில் 'வேலைக்காரன்' படம் மூலம் வில்லனாக அறிமுகமாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் விஜய்-அட்லி

சென்னை,நவ.02

தெறி, மெர்சல் வெற்றிக்கு பிறகு மீண்டும் விஜய் - அட்லி கூட்டணி இணையவுள்ளது.

சமீபத்திய பேட்டி ஒன்றில் பேசிய போதே அட்லி இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், "மெர்சல் வெற்றிக்கு மக்களுக்கு நன்றி சொல்ல வேண்டும், இதெல்லாம் அவர்கள் கொடுத்த ஆதரவு தான்.

மேலும், தெறியை விட மெர்சல் பெரிய வெற்றி, என் அடுத்தபடம் இதை விடப் பெரிதாக இருக்கும். அதில் விஜய் அண்ணாவும் இருப்பார்" என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli



## 31 வருட வெற்றிப் பயணம்

# இம்முறை முடியும்!

"பிரிஸ்பேர்ண் மைதானத்தில் 31 வருடங்களாகத் தொடரும் ஆஸ்திரேலியாவின் வெற்றிப்பயணத்துக்கு இந்த ஆண்டுடன் முற்றுப்புள்ளி வைக்கப்படும்" என அந்த அணி வீரரான அன்டர்சன் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர், எதிர்வரும் 23ஆம் திகதி பிரிஸ்பேர்ணில் உள்ள கப்பா மைதானத்தில் தொடங்கவுள்ளது.

இந்த மைதானம் ஆஸ்திரேலியாவிற்கு மிகுவும் ராசியானதாகும். இங்கு 1988ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா தோல்வியடைந்தது. அதன்பின்னர் அந்த அணி இந்த மைதானத்தில் தோல்வியடைந்ததே கிடையாது.

தற்போது இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா சென்றுள்ள நிலையில் அன்டர்சன் மேற்குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"பிரிஸ்பேர்ண் கப்பா மைதானம் ஆஸ்திரேலியாவின் கோட்டையாகத் திகழ்கிறது. அங்கு வைத்து அவர்களை வீழ்த்துவது எமக்குப் பெருமை. அது இந்த ஆண்டு நடைபெறும்.

ஆஸ்திரேலிய ஆடுகளங்கள் அதிக அளவில் 'ஸ்விங்' ஆகாது. அதனால் விக்கெட் இழப்புக்கு மாற்றுவழியைத்தேட வேண்டி வரும். பொதுவாக இங்கிலாந்து ஆடுகளம் போன்றுதான் ஆஸ்திரேலிய ஆடுகளம் இருக்கும். அதிக அளவில் வித்தியாசம் இருக்காது" என்றார். (ஐ)



# ஊதித் தள்ளியது இந்தியா!

புதுடில்லி, நவ.02

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதல் போட்டியில் 53 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது இந்திய அணி.

டில்லி பெரேஷா கோட்லா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ரோகித், ஷிகர் தவான் இணை சிறப்பான அடித்தளம் இட்டது. இருவரும் தலா 80 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். ஹர்திக் பாண்டியா ஓட்டமேதும் பெறாமல் ஆட்டமிழந்தார். ஹோலியும், டோனியும் ஆட்டமிழாக்கது முறையே 26, 7 ஓட்டங்களை எடுக்க, இந்திய அணி 20 ஓவர் நிறைவில் 3 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிஸாந்து இந்திய அணியின் பந்துவீச்சில் நிலைகுலைந்து 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது . அந்த அணியின் லாதம் , வில்லியம்சன், சண்டர் ஆகியோர் முறையே 39, 28, 27 ஓட்டங்களைப் பெற்றனர். 53 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது. (அ)


உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848



அனுசரணை

Sri Lanka Telecom Mobitel

We Care. Always.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 02.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.